## புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடி அருகே மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு கூட்டுப் பாலியல் வன்கொடுமை!

# பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு - உரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டும்!



### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு!

சென்னை, மே 20

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:–

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே மாற்றுத்திறனாளி பெண்ணொருவர் பணி முடித்து வீடு திரும்புகையில், கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட செய்தி மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது.

மகளிர் பாதுகாப்பை உறுதி செய்வோம் என்று வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்திருக்கும் த.வெ.க. அரசு, தொடரும் இது போன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு உரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டும்.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, தமிழ்நாடு தொடர்ந்து மகளிருக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையிலேயே செயல்படுவது, இந்த புதிய அரசின் கடமை.

இவ்வாறு அவர் – அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (20-05-2026) புதன்கிழமை மாலை 5 மணியளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்

**மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

## அவசரச் சட்டம் மூலம் மேலும் 4 உச்சநீதிமன்ற நீதிபதிப் பதவிகள்! சமூகநீதி, முதல் களப் பலியாகக் கூடாது!

# மதச்சார்பின்மையும், சமூகநீதியும் காக்கப்படும் வகையில் நியமனங்கள் நடைபெற வேண்டும்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 20-

அவசரச் சட்டம் மூலம் மேலும் 4 உச்சநீதிமன்ற நீதிபதிப் பதவிகள்! சமூகநீதி முதல் களப் பலியாகக் கூடாது! மதச்சார்பின்மையும், சமூகநீதியும் காக்கப்படும் வகையில் நியமனங்கள் நடைபெற வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

**ஓர்ந்து கண்ணோடாத பணி!**

நம் நாட்டு ஜனநாயக அமைப்பில் - டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் போன்ற புரட்சிச் சிந்தனையாளரால் - பல்வேறு உள் ஒத்துழையாமைக்கிடையிலும் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், உச்சநீதி மன்றம் என்ற தலைமை நீதி பரிபாலன அமைப்பின் முக்கியக் கடமை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்களையும், நோக்கங்களையும், இலக்குகளையும் பின்பற்றி, ஆட்சிகளால் இயற்றப்படும் சட்டங்கள் முன்னெடுத்துச் செல்லுகின்றனவா? மாறாக அதற்கு நேர் முரணாக அமைந்துள்ளனவா? என்று ஆய்ந்து தீர்ப்பளிக்கவேண்டிய முக்கிய கடமை, அதன் ஓர்ந்து கண்ணோடாத பணியாகும்!

மக்களின் கடைசி நம்பிக்கைக் களமும் அதுதான்! ஜனநாயகத்தையும், மக்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் அளித்துள்ள உரிமைகளையும் இடராமல், சட்டத்தின் செயலாக்கம் இருக்கிறதா என்று பார்ப்பது அதன் நீதி வழுவாத் தன்மை என்ற தனித்தன்மையாகும்.

ஆனால், நீதிபதிகள் நியமனங்களிலும் சரி, அளிக்கப்பட்ட தீர்ப்புகளிலும் சரி, மக்களின் முழு நம்பிக்கையைப் பெற முடியாத ஒரு வேதனையான நிலைதான் நிலவுகிறது!

அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இந்திய ஒன்றியத்தின் அடிப்படைக் கொள்கைகள் முக்கியமாகத் தெளிவுப்படுத்தப் பட்டு இருக்கின்றன.

**சமூகநீதிதான் முதன்மையானது!**

அந்தக் கண்ணோட்டத்தில் பன் மதங்கள், பல மாநிலங்கள், பல மொழிகள், பல கலாச்சாரம் கொண்ட பன்முகத்தன்மை கொண்ட, நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படி, மூன்று நீதிகளில் (Social, Economic and Political) சமூகநீதிதான் முதன்மையானது.

அதனை உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் ‘கொலிஜியம்’ பரிந்துரை செய்யும் கட்டத்திலும், பிறகு சட்டத்துறையைக் கடந்து, இறுதி கட்ட நியமனம் வரை சமூகநீதி கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்குக் கிடைக்கும் விடை ஏமாற்றம்தான்!

நீதிபதிகள் நியமனமும், மாநில அரசுகளின் பங்களிப்புமூலம்தான் என்ற நியாயப்பூர்வ நியமனமாக நடைபெறும் என்ற அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளதையே தலைகீழாக்கி, ஒரு மாநில அரசின் ஒப்புதல் கூட இன்றி, பரிந்துரைக்கும் வாய்ப்பும் பறிக்கப்பட்டது - சில தீர்ப்புகள்மூலம்!

**முதல் களப் பலியானது சமூகநீதி என்பது அதிர்ச்சியானது!**

பிறகு ‘கொலிஜியம்’ என்ற ஒரு முறை - அரசியலமைப்புச் சட்டக் கர்த்தாக்கள் உருவாக்கிய நியமன முறையில் இல்லாத ஒன்று புகுத்தப்பட்டு, அதில் முதல் களப் பலியானது சமூகநீதி என்பது அதிர்ச்சியான உண்மை.

இதற்கான மக்கள் கோரிக்கைக் குரல் வலுத்த பிறகு, அண்மையில்தான் ‘கொலிஜிய’த்தில் சமூகநீதிக் கொள்கை அதிகாரப் பூர்வமாக ஏற்று அறிவிக்கப்பட்டது, ஒடுக்கப்பட்ட சமூக நீதிபதிகள் நியமனம் மூலம்!

எத்தனை பேர்? எத்தனை சதவிகிதம்?

இன்று 34 நீதிபதிகள், தலைமை நீதிபதிகள் உள்பட உள்ளனர்.

அதில், எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., சிறுபான்மையினர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்? எத்தனை சதவிகிதம்?

அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள், நியமனங்களில் பின்பற்றப்பட்டுள்ளனவா என்றால், இல்லை, இல்லவே இல்லை என்பதுதான் கிடைக்கும் ஒரே பதில்.

அரசியலமைப்புச் சட்டம் 16(4) பிரிவில் இடம்பெற்றுள்ள ‘Adequate Representation’ என்ற சொற்றொடர், வெறும் ஏட்டுச்சுரைக்காய்தானா?

‘Adequate’ என்ற லத்தின் மொழி மூலச் சொல்லுக்குச் சரியான அர்த்தம், ‘Till it is equalized’ ‘போதுமான அளவு’ என்பதற்கு, ‘ஏற்றத் தாழ்வு அகற்றிட, முதல் கட்டமாக மற்றவர்களுக்கு சமமாக்கப்படல்’ என்பதேயாகும்!

இதில் யாருடைய பிரதிநிதித்துவம் போதிய அளவில் இல்லையோ, அவர்களும் மற்றவர்களுக்குச் சமமாக வரும் வரையில், ஏற்கெனவே முந்தி ஆதிக்கம் செலுத்துவோருக்கு வாய்ப்புத் தராமல், வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதுதான் ‘Adequate Representation’ என்பதின் உண்மைப் பொருளாகும்.

அந்த அளவுகோல், நீதிபதிகள் நியமனங்களில் பின்பற்றப்பட்டதா? என்றால், மிஞ்சுவது பெருத்த ஏமாற்றம்தான் - சமூக அநீதிதான்!

தற்போது, அவசரச் சட்டம் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 34-லிருந்து, 38 ஆக உயர்த்தப்படவிருப்பதற்குக் காரணம் ஏராளமான வழக்குகள் தேக்கம், அந்நிலை மாறவேண்டும் என்பதுதான் என்று சொல்லப்படுகிறது!

காவி மனம் கொண்டவர்களா?

கார்டு ஹோல்டர்களா? என்று பார்த்து...

‘சந்தடி சாக்கில் கந்தப்பொடி தூவுவது’ என்ற பழமொழியை நினைவுபடுத்துவதுபோல், தங்கள் கொள்கையான காவி மனம் கொண்டவர்களா? ‘‘கார்டு ஹோல்டர்களா?’’ என்று பார்த்து புதிய நியமனங்கள் செய்யப்படுமோ என்ற பேச்சு அடிபடுகின்ற நிலையில், முதல் களப் பலி, சமூக நீதிதான் என்று ஆகிவிடக் கூடாது!

நியாயத் தராசு சமூகநீதிக்கு எதிராகச் சாய்ந்துவிடக் கூடாது! வழக்குகள் தேக்கமின்றி ‘பைசல்’ ஆக வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது!

சமூகநீதிப் போராளிகளால் நிம்மதி அடைய முடியாத அச்ச உணர்வே முந்துகிறது!

ஆனால், அந்த சாக்கில், சமூக நீதியின் எதிரிகள் நுழைந்து இப்போது ‘மதச்சார்பின்மை’ என்ற அடிப்படைக் கொள்கையை நீர்த்துப் போகச் செய்யும் பலப்பல வியாக்கியானங்களையும், விளக்கங்களையும் நாள்தோறும் தரும் வழக்கு வாதங்கள் போக்கு உள்ளதை யதார்த்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை காப்பாளர்களால் நிம்மதி அடைய முடியாத அச்ச உணர்வே முந்துகிறது!

அது தவறு என்பதை நிரூபிக்கும் வகையில், புதிய நியமனங்கள் அமைவது நல்லது - விரும்பத்தக்கது!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் தென்னிந்திய நடிகர் சங்க துணைத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் – மீனாட்சி முருகன் தம்பதி, நேற்று முன்தினம் (18.05.26) மாலை திருநெல்வேலி மூன் மஹாலில் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினரும் பழங்காநத்தம் பகுதிச் செயலாளருமான எஸ்.வி.சுதன் அவர்களின் இல்ல விழாவில் கலந்து கொண்டு செல்வி ரியா தேவியை வாழ்த்தினர். மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி உடன் வாழ்த்தினார்.

## திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ. இல்லத்திருமண விழா!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்!

### உதயநிதி ஸ்டாலின் – டி.ஆர்.பாலு – கே.என்.நேரு – முன்னணியினர் பங்கேற்பு!

திருவாரூர், மே 20 -

திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம். எல்.ஏ.அவர்களின் சகோதரரும், கொரடாச்சேரி பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் அவர்களின் தந்தையுமான மறைந்த திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைசெல்வம் அவர்களின் மகள் கலையழகி - ராம்பாலாஜி ஆகியோரின் திருமண நிகழ்வை தஞ்சாவூரில் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதல்வர், கழக தலைவர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்.

இந்த திருமண நிகழ்வுக்கு கழக இளைஞர்அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணைப்பொதுசெயலாளர்கள் ஆ.இராசா, க. பொன்முடி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

ஒன்றியச் செயலாளர் ஆர். பாலச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

சி.பி.ஐ. முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன், முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், முன்னாள் அமைச்சர்கள் ரகுபதி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், டி.ஆர்.பி.ராஜா, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சிவ. வீ.மெய்யநாதன், கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, அருண் நேரு, வை.செல்வராஜ், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், இளைஞர்அணி மாநில துணை செயலாளர் ந.இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், ஆர். வைத்தியலிங்கம், கே.மாரிமுத்து, எஸ்.டி.பி.ஐ. கட்சி மாநில தலைவர் முகமது முபாரக், பி.ராஜமாணிக்கம், சயக்கோட்டை அன்பழகன், சோம.செந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோரும்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் க.தன்ராஜ், மு.வெங்கடேசன், எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலம் ஜி.பாலு, ப. ஆடலாரசன், சு.ஞானசேகரன், த.செல்வம், த.கணபதி உள்ளிட்டோரும்,

ஒன்றியச் செயலாளர்கள் வீ.அன்பரசன், வி.எஸ்.ஆர். தேவதாஸ், எஸ்.ஜோதிராமன, கொ.தேட்சிணாமூர்த்தி, பாலா. ஞானவேல், புலிவலாம். ஏ. தேவா, சேகர் . கலிய பெருமாள், ஐ.வி.குமரேசன், பா.பிரபாகரன், வே.மனோகரன், இரா. மனோகரன், ப.பிரகாஷ், சித்தேரி. சிவா, டி.எஸ்.டி.முத்துவேல், எஸ்.ஏ.செல்வராஜ், நா. கவியரசு, கே.வி.கே.ஆனந்த், நகரச் செயலாளர்கள் வாரை. எஸ். பிரகாஷ், வீரா.கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், எஸ். வி.பக்கிரிசாமி, பா. சிவநேசன், வ.பக்கிரிசாமி,சிவ.தியாகு, ஏ. கே.டி. சேரன் உள்ளிட்டோரும். பொதுக்குழு உறுப்பினர்கள் கலியபெருமாள், டி.செந்தில், கே. எஸ். எஸ். தியாகபாரி, பிரித்விராஜன், கமாலுதீன், ஆர்.முருகேசன், ராஜபூபாலன், காஞ்சித்துரை, செல்வா. ஜெயதேவன், கலைவாணிமோகன், நகர்மன்றதலைவர்கள் புவனப்ரியா செந்தில் , பாதிமா பஷீரா, மன்னை த.சோழராஜன், கவிதாபாண்டியன், கலைச்செல்வி முருகேசன், ஆர்.ராமராஜன், மகாலெட்சுமி முருகேசன், ஷர்மிளா சிவநேசன், ராஜசேகரன், மும்தாஜ் நவாஸ்கான், கீதா நாகராஜ் மற்றும் இளைஞரணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், மகளிர் அணி அமைப்பாளர் ஷோபா கணேசன் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

திருமண விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் நன்றி கூறினார்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ., மேல்பாட்டாம்பாக்கம் பி.என். பாளையம் நினைவில் வாழும் (மிசா) ஏழுமலை அவர்களின் மகன் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.மனோகர் மறைவையொட்டி நேற்று நடைபெற்ற படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். அண்ணாகிராமம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.கே.வெங்கட்ராமன், ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி, பண்ருட்டி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள், ஆர்.எஸ்.எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், மேல்பாட்டாம்பாக்கம் பேரூர்க் கழகச் செயலாளர் ஜெயமூர்த்தி அண்ணாகிராமம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ராமசந்திரன், கழக பொதுக்குழு உறுப்பினர் நா.பலராமன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பசும்பொன் தா. கிருட்டிணன்
### மே 20 (2003)



கல்லூரியில் பயிலும் போதே மாணவர் தி.மு.க.வில் தீவிரமாகப் பணியாற்றி அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மாவட்டக் கழகச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற பெருந்தலைவராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.


1996ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.டி.ஆர். பழனிவேல்ராசன்
### மே 20 (2006)



தமிழக சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறையும் – சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவராகவும் – பின்னர் தமிழக அரசின் அறநிலையத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சொத்து பாதுகாப்புக் குழு தலைவராகவும் பணியாற்றியவர்.

“அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது அடக்கமும், பண்பும், சான்றாண்மையும் பளிச்சிடுகின்றன” என தலைவர் கலைஞர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**